# அலகு - X

## பாடம் 20

## வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும் (Guidance and Counselling)

### 20:01 அறிமுகம்

வகுப்பறைகளில் எழும் கற்றலின் அளவு (Level of academic achievement) பல காரணிகளின் இடைவினையினின்றும் எழுவதாகும். இக்காரணிகளுள்

அ) மாணாக்கர்களது ஆற்றல்களும் பண்புகளும்

ஆ) ஆசிரியர்களது திறன்களும் பண்புகளும்

இ) ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே நிலவும் தொடர்பின் தன்மை

ஈ) வகுப்பறைச் சூழல் (மாணவர்களின் எண்ணிக்கை, வகுப்பு அமைப்பு, மாணாக்கர்களிடையே காணப்படும் தொடர்பின் இறுக்கம், மாணாக்கர்களிடையே நிலவும் தலைமைத் தன்மை போன்றவை வகுப்பறைச் சூழலை நிர்ணயிக்கும்)

உ) பள்ளியில் அமைந்துள்ள வசதிகளின் தன்மை (இடம், கருவிகள் போன்றவை)

ஊ) மாணாக்கர்களைப் பாதிக்கும் வெளிச் சூழ்நிலைகளின் (குடும்பம், சுற்றுப்புறம், சமுதாயம், பண்பாடு போன்றன) தன்மை ஆகியன யாவும் அடங்கும்.

முற்காலப் பள்ளிகளில் ஆசிரியர்களது பொறுப்பு, மாணாக்கர்களுக்கு கற்பித்து அவர்களின் பாடப்பொருள் அறிவினைப் பெருக்குவதனுடன் நின்றது. ஆனால் இன்று ஆசிரியர்களது பொறுப்புகள் விரிவடைந்துள்ளன. மாணாக்கர்களுக்குத் தேவைப்படும் அறிவுரை பகர்தலும் (Counselling) வழிகாட்டுதலும் (Guidance) இன்றைய கல்வி அமைப்பில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. மாணாக்கர்களது ஆளுமை, இசைந்த முழுவளர்ச்சியைப் பெற வாய்ப்புகளை அமைத்துத் தருவதே பள்ளிக் கல்வியின் இறுதி நோக்கமாகும் என்று இப்போது

G-Fort Academy www.gfort.in



எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. எனவே மாணவர்கள் தங்கள் திறமைக்கேற்ற பாடங்களையும், பிற்கால வாழ்க்கைக்கு உகந்த தொழில்களையும் தேர்ந்தெடுத்தல் போன்றவற்றில் மாணவர்களுக்கு உதவி செய்து அவர்களை வெற்றியையும் மனநிறைவையும் அடையச் செய்தல், இன்றைய கல்வி அமைப்பில் ஓர் அங்கமாக அமைந்துள்ளது.

## 20:02 வழிகாட்டுதல் என்பதன் வரையறை

"மாணவர்கள், தமது தற்போதைய சூழ்நிலைகளுக்கு உகந்த பொருத்தப்பாட்டினை பெற்றிடவும், தத்தம் ஆற்றல், விருப்பார்வம், சமூகத் தேவைகளுக்கு ஏற்ப, வருங்கால வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் உதவிடுதலே வழிகாட்டுதல்" எனப்படும்.

**ஆர்தர் ஜெ. ஜோன்ஸ்** கூற்றுப்படி **"வழிகாட்டுதலின் நோக்கம், ஒருவன் தனக்கு தேவையானவற்றை புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்யவும், பொருத்தப்பாட்டு நடத்தையினைப் பெறவும், வாழ்வின் இக்கட்டான தருணங்களில் தான் செய்ய வேண்டியவை யாவை என்பதைப் புரிந்து கொண்டு செயலாற்றிடவும் உதவி செய்து, சுயநெறிப்படுதல்** (self-direction) **என்னும் ஆற்றலைத் தொடர்ந்து பெற்றிடச் செய்தலே ஆகும்".**

**குரோ** மற்றும் **குரோ** (Crow and Crow) என்பார்களது கருத்துப்படி "எல்லா வழிகாட்டலின் அடிப்படைக் கருத்தும், திறன் மிக்கவர் பிறருக்கு வழிகாட்டி, அவரைத் தன் வாழ்வு வளம் பெறத் தக்க வாழ்க்கைக் கண்ணோட்டத்தைத் தானே உருவாக்கிக் கொள்ளச் செய்து, அதற்கேற்றவாறு முடிவுகளை எடுத்தும், செயற்படுத்தவும் உதவிடுதல்" என்பதே.

## 20:03 வழிகாட்டுதலின் முக்கியத்துவம் (Importance of Guidance)

இன்று வழிகாட்டுதல் முக்கியத்துவம் பெற்றுள்ளதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1. கல்வியின் நோக்கம் விரிவடைந்து, மாணாக்கர்களது ஆளுமையின் முழுவளர்ச்சியெனக் கொள்ளப்படுகிறது.
2. மாறிவரும் சூழ்நிலையுடன் சிறந்த, உயர்நிலைப்பட்ட பொருத்தப் பாட்டினைப் பெறக் கல்வி மாணவர்களுக்கு உதவ வேண்டும்.
3. தனி மாணாக்கனது தேவைகள், கவர்ச்சிகள், நாட்டங்கள் ஆகியவற்றுடன் கல்வி இணைந்து செல்வது அவசியம்.

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



4. மாணாக்கர்களது சாதனையினைத் தடுக்கும் காரணிகளைக் கண்டு நீக்கும் முயற்சியில் ஆசிரியர்கள் ஈடுபடவேண்டும்.

5. மேல்நிலைக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி ஆகியவற்றின் பல பிரிவுகளில் தனது ஆற்றல், கவர்ச்சிக்கேற்ற பிரிவினைத் தேர்ந்தெடுத்தலில் மாணவர்களுக்கு உதவி தேவை.

6. பள்ளிக்குப் பின் வாழ்க்கைத் தொழிலை தேர்ந்தெடுக்கவும், அதற்கான பயிற்சியைப் பெறவும் வழிகாட்டுதல் தேவை. இத்தகைய தேர்வு மனநிறைவு அளிக்கும்.

7. கல்வித் தொடர்பற்ற தனிப்பிரச்சனைகளை (Personal Problems) நீக்கவும், வழிகாட்டுதல் தேவை. போட்டி, மனமுறிவு, தாழ்வு மனப்பான்மை, கவலைகள் போன்றவை பள்ளிக் கல்வியைப் பாதிக்கும்.

## 20:04 வழிகாட்டுதலின் அடிப்படைக் கோட்பாடுகள் (Basic Principles of Guidance)

1. வழிகாட்டல் தனிப்பட்டவருக்கென்றே அளிக்கும் பணியாகும். இது ஒருவரை அவருடைய பிரச்சனையைத் தீர்க்க, அவரே முடிவெடுக்க உதவுகிறது. ஆனால் இது அவருக்காக அவருடைய பிரச்சனைகளைத் தானே தீர்ப்பதில்லை.

2. வழிகாட்டலின் மையப் பொருளே தனிநபராகும். ஆனால் இது வழிகாட்டும் செயல்முறையையோ, பிரச்சனையையோ மையமாகக் கொண்டதில்லை (Guidance is centred around the individual and not his problem). அதாவது வழிகாட்டலின் நோக்கம் வளர்ச்சியை உண்டாக்குவதே.

3. வழிகாட்டல், எல்லோருக்கும் பொதுவானது (Guidance is universal); எல்லோருக்கும், எல்லா வளர்ச்சி நிலைகளிலும் தேவைப்படுவது. பிறழ்வு நிலையுடையோர்க்கு மட்டுமே தேவைப்படுவது என்று எண்ணலாகாது.

4. வழிகாட்டலில் ஒருவனது முழுவளர்ச்சியும் கருத்தில் கொள்ளப் படுகிறது; அவனுடைய அறிதல்நிலையை மட்டும் மேம்படுத்தும் முயற்சியாக எண்ணிவிடலாகாது.

5. வழிகாட்டலின் முக்கிய நோக்கம் பிரச்சனை நடத்தை தோன்றியபின் அதை நீக்க முற்படுவதை விட அது தோன்றுவதற்கு முன் தடுத்தலே.



G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



6. வழிகாட்டல் என்பது உதவி செய்தலே; கட்டாயப்படுத்துதல் அல்ல.

7. வழிகாட்டுதல் என்பது, ஒருவர் தனக்கு வேண்டியவற்றை பொருத்தமாகத் தேர்ந்தெடுப்பதற்கும், முடிவுகள் மேற்கொள்வதற்கும் உதவுவதே. இதனால் பொருத்தமின்மையும், பிறழ்வும் (Misfits and unfits) தவிர்க்கப்படுகின்றன.

8. வழிகாட்டல், ஒரு தொடர் இயக்கச் செயல்பாடாகும். ஒருவனுடைய வாழ்நாள் முழுவதும், அவனுக்குக் கல்வியிலும், தொழிலிலும், நன்னெறிப்படுத்தி பதவி உயர்வையும், ஊக்க ஊதியங்களையும் பெற, வழிகாட்டல் உதவும்.

9. வழிகாட்டல், ஒருவன் தன்னைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளவும், சுயஉறுதிப்பாட்டை (Self determination) உருவாக்கிக் கொள்ளவும் உதவுகிறது. அதாவது தன்னுடைய திறமைகள், விருப்பார்வங்கள் (Interest), தேவைகள், நாட்டங்கள், இயல் ஆற்றல் அல்லது ஏலுமை (Potential), அவாவுநிலை ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், அவற்றிற்கேற்ப உயர்படிப்பு, தொழில் ஆகியவற்றை தேர்ந்தெடுக்கவும், தேர்வு செய்தபின், எவ்வித சலனமுமின்றி தேர்ந்தெடுத்த இலக்குகளை நோக்கி முயலவும் வழிகாட்டல் உதவுகிறது.

10. வாழ்க்கையில் பொருத்தப்பாட்டினைப் பெற்று, தனக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ளவனாக வாழ, வழிகாட்டுதல் உதவுகிறது.

11. கல்வி, சமூகம், தொழில் போன்ற எல்லாத் துறைகளிலும் வழிகாட்டல் செயல்படும்.

12. வழிகாட்டல் கல்வியின் செயல்படு பகுதியாகும். (Guidance is the dynamic aspect of education). கல்வி, இலக்கை உருவாக்குகிறதென்றால், வழிகாட்டல் அதனை அடைய உதவி செய்கிறது. கல்வி, கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்குகிறதென்றால், வழிகாட்டல் அதனைச் செயற்படுத்துகிறது. எனவே சில உளவியல் அறிஞர்கள் கல்வியும், வழிகாட்டுதலும் ஒன்றையொன்று சார்ந்தவை; பிரிக்க முடியாதவை` என்று கூறுகின்றனர்.

## 20:05 வழிகாட்டுதலின் முக்கிய வகைகள் (Types of Guidance)

வழிகாட்டுதலில் பல வகைகள் இருந்தபோதிலும் (மதம் சார்ந்த

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



வழிகாட்டல், உடல்நிலை சார்ந்த வழிகாட்டல், சமூகம் சார்ந்த வழிகாட்டல், ஆளுமை வளர வழிகாட்டல், திருமண வழிகாட்டல், பால் உணர்வு சார்ந்த வழிகாட்டல், ஓய்வு நேரத்தை பயன்படுத்த வழிகாட்டல், குடும்பம் சார்ந்த வழிகாட்டல், முதிர் பருவத்தினருக்கு வழிகாட்டல், ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டல், தலைமைப் பொறுப்பிற்கு வழிகாட்டல், கல்வியில் வழிகாட்டல், தொழிலில் வழிகாட்டல், தனிநபர் பிரச்சனைகளுக்கு வழிகாட்டல் போன்றவை) மாணவர்களைப் பொறுத்தவரை கல்வியில் வழிகாட்டல் (Educational Guidance), தொழில் தேர்வில் வழிகாட்டல் (Vocational Guidance), தனிநபர் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உதவும் வழிகாட்டல் (Personal Guidance) ஆகிய மூன்றும் மிக முக்கியமானவை.

## 20:05:1 கல்வியில் வழிகாட்டல்

கல்வியில் வழிகாட்டுதல் என்பது, மாணவர்கள் திறமையாகக் கற்கவும், படிப்புகளைத் தேர்ந்தெடுக்கவும், மேம்பட்ட கல்வி அடைவை எட்டுவதில் எதிர்படும் இடர்ப்பாடுகளை அகற்றவும், உதவி செய்தல் ஆகும். தமது உளப்பண்புகளுக்கும், திறன்களுக்கும் ஏற்ற வகையில், மாணவர்கள் தங்களுக்குக் கல்வியில் கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றமடைய கல்வி வழிகாட்டல் துணைபுரிகிறது. புதிய படிப்புகளையும், அதற்குத் தேவையான தகுதிகளையும் முன்னதாகவே அறிந்து கொள்ளச் செய்து, மாணவர்களை அதற்குத் தகுந்தவாறு திட்டமிடச் செய்தலிலும், கல்வி வழிகாட்டல் பயன்படும். இது தொடர்பாக கல்வி வழிகாட்டாளர் (Educational Counsellor) மாணாக்கரது அனைத்து விவரங்களையும் சேகரித்து வைத்தும், கற்கும் முறைகளில் மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தும், எதிர்படக் கூடிய இடர்ப்பாடுகளை முன்கூட்டியே அறிந்து அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ள மாணவர்களைத் தயார் செய்வதிலும் உதவ முடியும்.

## 20:05:2 தொழில் தேர்வில் வழி காட்டுதல் (Vocational Guidance)

மாணவர்களைப் பற்றிய முழுவிவரங்களையும் சேகரித்தும், வெவ்வேறு பணிகள் (தொழில்கள்) பற்றிய தகவல்களைப் பெற்றும், அப்பணிகளில் வெற்றியுடன் செயல்படத் தேவையான உளவியல் பண்புகள், அப்பணிகளில் கிட்டும் மனநிறைவுத் தன்மை, வெவ்வேறு பணிகளை பெறக்கூடிய வாய்ப்புகள், அப்பணிகளைப் பெறுவதற்கான கல்வித்தகுதிகள், பயிற்சிகள், பணியில் முன்னேறக் கூடிய வாய்ப்புகள் முதலியவற்றைப் பற்றியும் தகவல்களைப் பெற்று அவற்றை மாணவர்களுக்கு உதவும் நோக்கில் வழங்குவதே தொழில் தேர்வில்

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



வழிகாட்டுதலாகும். தொழில் வழிகாட்டுதலில், நாட்டச் சோதனைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. தொழில் தேர்வு வழிகாட்டுதலில் ஒரேயொரு தொழிலைத் தேர்ந்தெடுக்க உதவுவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட தொழில்துறையைத் தேர்ந்தெடுப்பதற்கே உதவி அளிக்கப்படும்.

### 20:05:3 மாணாக்கரது தனிப்பட்ட வாழ்வில் எதிர்படும் பிரச்சனைகளையும், சிக்கல்களையும் தீர்ப்பதில் வழிகாட்டுதல் (Personal Guidance)

இதன் தேவைக்குப் பல காரணங்கள் உள்ளன. இன்றைய சிக்கல் மிகுந்த வாழ்க்கையில் எழக்கூடிய பிரச்சனைகளை எதிர்த்து வெற்றி கொள்ள குமரப் பருவத்தோர்க்கு உதவி தேவைப்படுகிறது. மாணாக்கர்களது குடும்ப சூழ்நிலை சிலபோது சரியாக அமையாதிருந்தால் அவர்களது வாழ்க்கையில் பல பிரச்சனைகளும், மனப் போராட்டங்களும் எழுந்து அவர்களிடையே பொருத்தப்பாடின்மையைத் (Maladjustment) தோற்றுவிக்கக் கூடும். இந்நிலை எழாமல் தடுக்க அவர்களுக்கு வழிகாட்டுதல் தேவைப்படும். குமரப்பருவத்தில் முதிர்ச்சி பெற்று முன்னணிக்கு வரும் பாலுணர்ச்சி (Sexual Urge) இப்பருவத்தோரிடம் பலபோது குழப்பங்களையும், வீண் கவலைகளையும் தோற்றுவிப்பது உண்டு. இவை எழாமல் தடுப்பதற்கு வழிகாட்டலும், அறிவுரை பகர்தலும் தேவைப்படும். மாணர்க்கர்கள் மனவெழுச்சி சமநிலையும் மனநலமும் எய்த வாழ்க்கைக்கான வழிகாட்டல் உதவுகிறது. இவ்வகை வழிகாட்டலின் அடிப்படையாக மனநலவியல் அமைகிறது. இவ்வகை வழிகாட்டல் முக்கியமானதும், கடினமானதும் ஆகும். இதில் ஆசிரியரது சிறப்பான பண்புகளும், அவர் மாணாக்கர்கள் பால் காட்டும் அன்பும், பரிவும் முக்கிய பங்கினைப் பெறுவனவாம்.

## 20:06 பள்ளியில் "வழிகாட்டுதல் மையம்" அமைத்தல் (Organising a School Guidance Centre)

கல்வியில் வழிகாட்டல், தொழில் தேர்வில் வழிகாட்டல், தனிநபர் வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கான வழிகாட்டல் ஆகியவற்றின் தேவை இன்று பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அதிகமாகவே உணரப்படுகிறது. பள்ளி கல்லூரி வளாகங்களில் மாணவர் அமைதியின்மை, கிளர்ச்சியில் ஈடுபடுதல் ஆகியவை இன்று நாம் கண்ணுறும் காட்சியாகும். இவற்றிற்குத் தீர்வு, பள்ளி கல்லூரி வளாகங்களில் வழிகாட்டுதல் மையத்தை உடனடியாகத் தொடங்கி செயற்படுத்துவதுதான். தலைமையாசிரியரை தலைவராகக் கொண்டு, 'வழிகாட்டுதலில்' சிறப்புப் பயிற்சி பெற்ற தனி

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



அலுவலரை (Guidance Master)யும், ஆர்வமிக்க ஆசிரியர்களையும் கொண்ட வழிகாட்டுதல் குழு பள்ளியில் அமைக்கப்பட வேண்டும். வழிகாட்டுதல் குழுவின் கூட்டம் மாதந்தோறும் நடைபெற வேண்டும். வழிகாட்டுதல் மையத்தின் சேவை, தேவைப்படும் அனைவருக்கும் கிட்டும் வண்ணம் அமைந்திருக்க வேண்டும். பள்ளி வழிகாட்டல் திட்டம் வெற்றிபெற அனைத்து ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருடைய ஒத்துழைப்பு அவசியமாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு திரள்பதிவேடு (Cumulative record) தயார் செய்ய வேண்டும். அதில் மாணவனைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும், சேகரித்து உடனுக்குடன் பதிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவனது திரள் பதிவேடும், அவனைப் படம் பிடித்து காட்டுவது போல் அவனைப் பற்றிய எல்லா செய்திகளையும் தருவதாய் இருத்தல் வேண்டும்.

வழிகாட்டல் பணி, பள்ளிக் கால அட்டவணையில் இடம் பெற வேண்டும். இது அத்தியாவசியம் மட்டுமல்ல, தற்காலத்தில் வரவேற்கத் தக்கதுமாகும். காரணம், உலகம் பிரச்சனைகளால் பிணைக்கப் பட்டுள்ளதேயாகும். ஆகையால் போதுமான கால அளவு, பள்ளி வழிகாட்டல் பணிக்குச் செலவிட வேண்டும். வழிகாட்டலுக்காக, சோதனைகள் அளித்தல், தகவல்கள் சேகரித்தல், அவற்றைப் பதிவு செய்தல், திரள் பதிவேடு தயாரித்தல், தனிப்பட்டவனுக்கு வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல் போன்ற பணிகள் பள்ளியில் மேற்கொள்ளப்பட வேண்டும். பள்ளி நிகழ்ச்சிகளில் வழிகாட்டல் திட்டம் ஒரு முக்கியமான பகுதியாகும். பொதுவாக பள்ளி வழிகாட்டுதல் மையத்தின் பணிகள் கீழ்க்கண்ட திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும்.

## 20:06:1 மாணவர் பற்றிய தகவல் திரட்டும் பணி (Student Appraisal Service)

இது தகவல் சேகரித்தல், சேகரித்ததைப் பதிவு செய்தல், பதிவு செய்ததைப் பயன்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். மாணவர்களுடைய உயரம், எடை, உடல் வலு, உடல் நலம், கல்வி அடைவு, உளநலம், ஆவல்கள் (Aspirations), விருப்பார்வம், நாட்டங்கள், மனப்பான்மைகள், துல்லியமாக எதையும் செய்யும் ஆற்றல், விடா முயற்சி, துணிகரம், குடும்பச் சூழல் போன்ற பல்வேறு விவரங்களை (உடல், உளம், சமூகம் சார்ந்த விவரங்கள்) திரட்டி, ஆராய்ந்து முடிவுக்கு வருதல் (collect, analyse and interpret) இப்பிரிவில் இடம் பெறும் முக்கிய பணியாகும்.

மாணவர்களைப் பற்றிய விவரங்களை, அவர்களது பெற்றோர்கள்,

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



ஆசிரியர்கள், நண்பர்கள், பள்ளி மருத்துவர் போன்றோரிடமிருந்து சேகரிப்பதோடு, அவர்களிடமிருந்தும் சேகரிக்கவேண்டும். இதற்காக நுண்ணறிவுச் சோதனைகள், நாட்டச் சோதனைகள், கவர்ச்சி சோதனைகள், மனப்பான்மை அளவுகோல் போன்ற உளவியல் சோதனைகளும், மருத்துவச் சோதனை, உடற் சோதனைகள், உற்று நோக்கல், வினாவரிசைப் பட்டியல், தரஅளவுகோல்கள், நேர்முகப் பேட்டிகள், போன்றவற்றைச் செயற்படுத்தியும் தகவல்களைத் திரட்டலாம். திரள் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் செய்திகளை, ஆசிரியரே சேகரித்துப் பதிவு செய்ய வேண்டும். அப்போதுதான் மாணவர்களைப் பற்றி ஆசிரியர் நன்றாக அறிய முடியும். தேவை ஏற்படும்போது அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

### 20:06:2 தகவல் பரப்பு பணி (Information Dissemination Service)

இது கல்வி, தொழில் சார்ந்த தகவல்களை மாணவர்களுக்கு அளித்திடும் பணியாகும். எந்தெந்த தொழிலுக்கு எத்தகைய திறன்கள் தேவை, எத்தகைய கல்வித் தகுதியும், பயிற்சியும் தேவை, எங்கே பெற வேண்டும் என்பனவற்றைப் பற்றியெல்லாம் தகவல்கள் அளிப்பதன் மூலம் மாணவர்கள் தங்கள் திறமைகள், நாட்டங்களின் அடிப்படையில் சரியான படிப்புகளையும், தொழிலையும் தேர்ந்தெடுக்கவும், முடிவுகளை மேற்கொள்ளவும் உதவிட முடியும். கலந்துரையாடல், வாழ்க்கைப்பணி முன்னேற்ற மாநாடு, வாழ்க்கைப்பணி முன்னேற்ற கண்காட்சி, வாழ்க்கைப்பணி முன்னேற்ற படக்காட்சி போன்றவை மூலம், அனைத்து விவரங்களையும் வழங்கலாம்.

### 20:06:3 அறிவுரை பகர்தல் பணி (Counselling Service)

இது ஒரு நோய் நீக்கற்கலை சார்ந்த பணியாகும். ஒரு சிறப்புப் பயிற்சி பெற்ற (Psychologist trained in Counselling) அறிவுரை பகர்பவர், தனிப்பட்ட மாணவருக்காக நடத்தும் தனிப்பேட்டி முறையாகும். இத்தகைய நேர்முகப்பேட்டி தனிமையில், நட்புத் தன்மையில் பரிவுடன் கூடிய சூழ்நிலையில் நடத்த வேண்டியதாகும். தன்னைச் சார்ந்த, கல்வி சார்ந்த, தொழிற்சார்ந்த பிரச்சனைகளுக்கு, தனிப்பட்ட முறையில் கலந்துரையாடல் மூலம் தீர்வு காணல் வேண்டும். இத்தகைய அறிவுரை பகர்தலில் பிரச்சனைக்குரிய மாணவர்களும், நெறிபிறழ்ந்த மாணவர்களும் தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு உதவப்படுகிறார்கள்.

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



### 20:06:4 வேலையில் அமர்த்தும் பணி (Placement Service)

இது இரு பகுதிகளைக் கொண்டது. ஒன்று சரியான படிப்பைத் திறமைக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுத்தலாகும். மற்றொன்று சரியான வேலையைத் திறமைக்கேற்றவாறு தேர்ந்தெடுத்தலாகும். இது ஆசிரியர்களைக் கொண்டு, வேலை வாய்ப்புத்துறைத் தலைவர், வணிக தொழில் நிறுவன ஆட்சேர்ப்பு அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்போடு பள்ளி, கல்லூரி வளாகங்களில் ஆட்சேர்ப்பு முகாம்கள் (Campus selection programme) மூலம் செய்ய வேண்டிய செயலாகும். பொறியியற் கல்லூரிகள், ஐ.ஐ.டி. சுயநிதிக் கல்லூரிகள் போன்றவற்றில் இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 20:06:5 பின்தொடர்பணி (Follow-up service)

பள்ளியிலும், பள்ளிக்குப் பிறகும், மாணவர்களுடைய முன்னேற்றத்தையும், வாழ்க்கையில் பெறும் வெற்றியையும் குறித்து அடிக்கடி மீள்பார்வை செய்ய வேண்டும். இவ்வாறு செய்வது மாணவர்கள், பள்ளி, கல்லூரி, பயிற்சி நிறுவனம் போன்றவற்றில் திருப்தியோடு, எந்த அளவிற்குப் பொருத்தப்பாட்டுடன் படிப்பு, கலைத்திட்டச் செயல், கலைத்திட்ட துணைச் செயல்கள், வேலை (பணி) போன்றவற்றில் செயல்படுகிறார்கள் என்பதைக் காண உதவுகிறது.

மேற்குறிப்பிட்டவாறு, வழிகாட்டல் பணி, பள்ளியில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், நண்பர்கள், திறமை வாய்ந்த வழிகாட்டு அலுவலர் ஆகியோரின் ஒத்துழைப்பால்தான் நடைபெற முடியும்.

## 20:07 வழிகாட்டும் திட்டத்தில் ஆசிரியரின் பங்கு (Role of Teachers in Guidance Programmes)

'கல்வி கற்பித்தல்', 'அறிவுரை பகர்தல்' இரண்டுமே, மாணவர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட தேவைகள், அவர்களின் பிரச்சனைகள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டவை. ஒன்று மற்றொன்றிற்கு உதவி, மாணவர்கள் தங்கள் செய்திறன்கள், பொருத்தமான மனப்பான்மைகள், இலட்சியங்கள் ஆகியவற்றை வளர்த்துக் கொண்டு ஜனநாயக சமூகத்தில் பயன்மிக்கவர்களாக விளங்க வழிவகை செய்ய வேண்டும்.

சிலசமயங்களில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சிறந்த வழிகாட்டுதலும், அறிவுரை பகர்தலும் திறன்மிக்க ஆசிரியர்கள் மூலமே நிகழ்கின்றன. ஏதேனும் ஒரிரு சமயங்களிலாவது மாணவர்கள் தாங்கள்

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



பள்ளிக்கு வெளியே சந்திக்கும் பிரச்சனைகள், குடும்ப, மதத் தொடர்புடைய பிரச்சனைகள் ஆகியவற்றை தங்கள் நம்பிக்கை பெற்ற ஆசிரியரிடம் எடுத்துச் சென்று விவாதிக்கிறார்கள். மற்றவர்களை விட (அறிவுரை பகர்தலில் பயிற்சி பெற்ற சிறப்பு அலுவலரை விட) வகுப்பாசிரியர்களே மாணவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் அதிகமிருப்பதால், மாணவர்களின் கஷ்டங்கள், அவர்களின் குடும்ப சூழ்நிலை, பணப்பிரச்சனைகள் அவர்களைத் தொந்தரவு செய்யும் இதர பிரச்சனைகள் குறித்தும் நன்கு அறிந்திருக்க முடியும். மாணவர்களிடம் பரிவுடன் நடந்து கொள்வதன் மூலமும், அவர்களிடம் தனக்குள்ள அக்கறையை வெளிப்படுத்துவதன் மூலமும், அவர்களது உண்மையான பிரச்சனைகள் யாவை என்பதை ஆசிரியர் அறிய முடியும். ஆசிரியர் தன்னுடைய வரம்புகளை நன்கறிந்து, பிரச்சனையின் தீவிரத்தைப் பொறுத்து, தேவைப்படும்போது, குறிப்பிட்ட பிரச்சனை நடத்தையுள்ள மாணவனை அறிவுரை பகர்தலுக்கான சிறப்பு அலுவலரிடம் பரிந்துரைக்க வேண்டும். தன்னிடம் உள்ள மாணவனைப் பற்றிய அனைத்து விவரங்களையும் சிறப்பு அலுவலரிடம் கொடுப்பதன் மூலம், மாணவனை நன்னெறிப்படுத்துதலைச் சிறப்புடனும், திறமையுடனும் அமைத்திட முடியும். சாதாரண மாணவர் பிரச்சனைகளுக்கு ஆசிரியரே வழிகாட்டுதல் அளிக்க முடியும்.

## 20:08 அறிவுரை பகர்தல் (Counselling)

வழிகாட்டல் திட்டத்தில், அறிவுரை பகர்தல் மையப் பங்கை வகிக்கிறது. தீவிர பிரச்சனை நடத்தையுடைய மாணவர்களுக்கு (Problem Children) அறிவுரை பகர்தல் மட்டுமே பலனளிக்கும். இது ஒரு பயிற்சி பெற்றவரிடையேயும், பயிற்சி பெறாத மற்றொருவரிடையேயும் நிகழக் கூடிய கலந்துரையாடலாகும். இதில் பயிற்சி பெற்றவர், பயிற்சி பெறாதவர் அடைய வேண்டிய இலக்கை அடைய, நேர்முகப் பேட்டி மூலம் வழிகாட்டி உதவுகிறார்.

### 20:08:1 அறிவுரை பகர்தலின் வரையறை

"அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவர் ஆகியோரிடையே நேர்முகத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, அறிவுரை பகர்பவர் தனது திறமையையும், ஏற்படுத்திக் கொண்ட நெருக்கத்தையும் பயன்படுத்தி, அறிவுரை பெற வந்தவன் தன்னுடைய தற்போதைய சூழ்நிலையையும், இதனால் விளையக்கூடிய எதிர்கால சூழ்நிலையையும் உணரச் செய்து, தன்னுடைய இயல் திறன்களையும், ஆற்றல்களையும், தனக்கும்

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



சமூகத்திற்கும் பயனுள்ள வகையில் பயன்படுத்தி மனநிறைவுள்ள வாழ்க்கை வாழவும், தனது பிரச்சனைகளை எதிர்காலத்தில் தானே தீர்த்துக் கொள்ளவும் உதவும், வளர்ச்சியைப் பெருக்கும் செயலே அறிவுரை பகர்தலாகும் (டால்பார்ட்)

## 20:08:2 "அறிவுரை பகர்தல்" என்பதன் பண்புகள்

அறிவுரை பகர்தல் என்பதாவது:

அ) அறிவுரை பகர்பவனுக்கும், அறிவுரை பெறுபவனுக்கும் (Client) இடையே தனித்த நேர்முகத் தொடர்பு ஏற்படுதல் (பேட்டி)

ஆ) வளர்ச்சிச் சூழ்நிலையை தோற்றுவிக்கும் வண்ணம், அறிவுரை பெறுபவன் தன் நிறைகுறைகளை உணரச் செய்தல்.

இ) தன் இயல்திறன்களையும், ஆற்றல்களையும், தனக்கும் சமூகத்திற்கும், உகந்த வகையில் அறிவுரை பெறுபவனை பயன்படுத்தச் செய்தல்.

ஈ) இது ஒரு தொழில் முறை பணி; அறிவுரை பகர்வதற்கு முன் இருவருக்குமிடையே மனநெருக்கம் ஏற்பட்டு, அறிவுரை பெறுபவனிடம் நம்பிக்கையைத் தோற்றுவிக்க வேண்டும்.

உ) அறிவுரை பகர்தலின் உடனடி நோக்கம், அறிவுரை பெறுபவர் தன்னுடைய தற்போதைய பிரச்சனையைத் தானே தீர்த்துக் கொள்ள உதவுதல்; எதிர்காலத்தில் தனது பிரச்சனைகளைத் தானே தீர்த்துக் கொள்ளும் ஆற்றலை உருவாக்கிடல், அதற்கு அடுத்த நோக்கமாகும்.

ஊ) அறிவுரை பகர்தல், அறிவுரை பெறுபவனிடம் ஆளுமை மாற்றத்தை விரும்பத்தக்க வகையில் ஏற்படுத்துகிறது. அறிவுரை பெறுபவர் தன்னைப் பற்றி முழுமையாக உணர்ந்து கொள்ள உதவி அளிக்கப்படுகிறது.

எ) அறிவுரை பகர்தல் என்பது அறிவுரை பெறுபவரிடம் கற்றல் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

ஏ) அறிவுரை பகர்தல் என்பது

- உபதேசம் செய்வதல்ல
- சமாதானப்படுத்துவதோ, வற்புறுத்துவதோ அல்ல
- விசாரணை செய்வதல்ல
- உளப்பகுப்பாய்வு முறையும் அல்ல

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



## 20:09 அறிவுரை பகர்தலில் இடம் பெறும் செயல்களின் வரிசை (Steps Involved in the Counselling Process)

நியூஸம் (Newsom) என்பாரது கருத்துப்படி அறிவுரை பகர்தலில் இடம் பெறும் படிநிலைச் செயல்களாவன :

i) பிரச்சனைக்குரியவர், உதவி கேட்டு அறிவுரை அளிப்பவரை நாடி வருகிறார்.

ii) தன்னை நாடி வருபவரோடு, அறிவுரை அளிப்பவர், மனநெருக்கம் ஏற்படுத்திக் கொள்ள (Establishing rapport) முனைகிறார்.

iii) உதவி அளிக்கப்படும் சூழ்நிலை தோற்றுவிக்கப்படுகிறது.

iv) அறிவுரை அளிப்பவர், தன்னை நாடி வந்தவரின் உளக்கிடக்கைகளை தங்கு தடையின்றி வெளிப்படுத்த (Catharsis) ஊக்கப்படுத்துகிறார்.

v) அறிவுரை அளிப்பவர் தன்னை நாடி வந்தவரின் (Client) எதிர்மறை மனப்பான்மைகளை அறிந்து, பரிவுடன் ஏற்று, அவற்றின் குறைபாடுகளை அறிவுரை பெறுபவர் உணரச் செய்கிறார் (Diagnosis)

vi) பிரச்சனையைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளை அறிவுரை பெறுபவர் வெளியிடும்போது, அவற்றின் சாதக – பாதகங்களை தெளிவுபடுத்துகிறார் (Prognosis)

vii) பிரச்சனைக்குரிய பொருத்தமான தீர்வு என்று தான் கருதுவதை அறிவுரை பெறுபவர் தேர்வு செய்து அறிவிக்கிறார் (Development of Insight)

viii) புதிய இலக்குகளை அமைத்தல் (அறிவுரை பகர்தல்)

ix) தன்னம்பிக்கை வளர்தலும், முடிவுகளைத் தானே எடுக்கும் ஆற்றலைப் பெறுதலும் (அறிவுரை பகர்தல்)

x) பின்தொடர்ப்பணி (அறிவுரை பகர்தல்)

xi) அறிவுரை அளிப்பவரின் தேவை இனி இல்லை (அறிவுரை பகர்தலை நிறுத்துவது)

## 20:10 அறிவுரை பகர்தல் முறைகள் (Types of Counselling)

அறிவுரை பகர்தலில் பின்பற்றப்படும் முக்கிய மூன்று வழி முறைகளாகவன:

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



i) நேரடி அறிவுரை பகர்தல் அல்லது நெறிசார்ந்த முறை (Directive Counselling)

ii) மறைமுக அறிவுரை பகர்தல் அல்லது நெறிசாரா முறை (Non-Directive Counselling)

iii) சமரசமுறை அல்லது பொது இணைப்பு முறை (Eclectic Approach in Counselling)

## 20:10 :1 நேரடி (நெறி சார்ந்த) அறிவுரை பகர்தல்

இம்முறையில் அறிவுரை அளிப்பவருக்கே பெரும் பங்குண்டு. இவரையே இம்முறை மையமாகக் கொண்டது. அறிவுரை பெறுபவர், அறிவுரை பகர்பவர் நோயறிந்து கூறும் ஆலோசனையின்படி முடிவுகளை மேற்கொண்டு செயற்படத் தொடங்குகிறார். அறிவுரை பகர்பவர், தான் கண்டறிந்ததை, விளக்கி, அறிவுரை பெறுபவர் செயல்பட வேண்டிய வழிமுறைகளைப் பரிந்துரைக்கிறார். (நமது நோய்க்கு, உடல் மருத்துவரிடம் சென்று அவரிடம் ஆலோசனை பெற்று அதன்படி நடந்து கொண்டு மருந்து மாத்திரைகளை உட்கொள்வது இத்தகைய வழிமுறையில் அமைந்ததே). இம்முறையின் படிகளாவன :

அ) பகுப்பாய்வு (Analysis) (சேகரித்த விவரங்களை ஆராய்ந்தறிதல்)

ஆ) தொகுப்பாய்வு (Synthesis) (கண்டறிந்தவற்றைத் தொகுத்து, ஒட்டு மொத்தக் கருத்தை உருவாக்குதல்)

இ) நோயறிதல் (Diagnosis) (பிரச்சனையைப் பற்றியும் அதற்குரிய காரணம் பற்றியும் அறிதல்)

ஈ) வருவதுரைத்தல் (Prognosis) (எதிர்காலத்தில் இப்பிரச்சனை எப்படி உருப்பெறும் என்று முடிவெடுத்துக் கூறுதல்)

உ) அறிவுரை பகர்தல் (Counselling) (மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் கூறி, நெறிப்படுத்துதல்)

ஊ) பின்தொடர் செயல்பணி (Follow up) (நெறிப்படுத்திய பின் ஏற்பட்ட நடத்தையின் தன்மையை மதிப்பீடு செய்தல்)

### 20:10:1:01 நேரடி அறிவுரை பகர்தல் முறையின் குறைபாடுகள்

i) இம்முறை சர்வாதிகாரமுறை மாதிரி அறிவுரை அளிப்பவர், அறிவுரை பெறுபவர் செய்ய வேண்டியவை யாவை என்று

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



கட்டளையிடுகிறார். அதன்படி செயல்படுவதைத் தவிர அறிவுரை பெறுபவருக்கு வேறுவழியில்லை.

ii) அறிவுரை பெறுபவர், என்றும் அறிவுரை பகர்பவரை சார்ந்தேயிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. தன்னிச்சையாக செயல்பட முடியாது.

iii) வழிகாட்டலின் அடிப்படைத் தத்துவத்தின்படி, அறிவுரை பெறுபவர் தன்னைத்தானே உணர்ந்து, தன்னிச்சையாக முடிவெடுக்க உதவ வேண்டும். ஆனால் இம்முறை அவ்வாறு இயங்குவதில்லை.

iv) இங்கு அறிவுரை பெறுபவரிடம் புதிய கற்றல் ஏதும் ஏற்பட்டு, வளர்ச்சிக் கூறுகள் தோன்றிட வாய்ப்பில்லை.

இம்முறை இளஞ்சிறார்களுக்கும், தீவிர நடத்தைக் கோளாறு ஏற்பட்டுள்ளவர்களுக்கும் மட்டுமே அதிகம் பயன்படும்.

## 20:10:2 மறைமுக (நெறிசாரா) அறிவுரை பகர்தல்

**கார்ல் ரோஜர்ஸ்** (Carl Rogers) என்பவர் இம்முறையை பிரபலப் படுத்தினார். இம்முறையில் அறிவுரை அளிப்பவர் அதிகம் செயல்படுவதில்லை. அறிவுரை பெறுபவரை மையமாகக் கொண்டு இயங்கும் இம்முறையில் அறிவுரை பெறுபவரே, உட்காட்சி வழியே தன்னுடைய பிரச்சனைக்கான தீர்வை அடைகிறார். அறிவுரை அளிப்பவர் பிரச்சனைக்குரிய தீர்வைக் கூறுவதில்லை; அறிவுரை பெறுபவர் தானே தீர்வைக் காணக் கூடிய வகையில், உகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்து இலக்கை எட்டுவதில் துணைபுரிகிகிறார். அறிவுரை பெறுபவர் தன்னுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து, தனது நிறை–குறைகளை அறியச் செய்து, மனமுதிர்ச்சி பெறச் செய்தல் மூலம் மேம்பட்ட பொருத்தப்பாட்டினை அடையச் செய்தலே அறிவுரை அளிப்பவரின் செயல்பாடு ஆகும். எனவே ‘அறிவுரை பெறுதல்’ என்ற நிகழ்வுக்கு உட்பட்டபின்னர் அறிவுரை பெற்றவரின் நடத்தை மேம்படுவதுடன் ஆளுமை வளர்ச்சியில் இசைவுத்தன்மை அதிகரிக்கிறது. அதனால் தான் நெறிசாரா அறிவுரை பகர்தலை **“வளர்ச்சிசார் செயல்”** என்று வர்ணிக்கின்றனர்.

### 20:10:2:01 மறைமுக அறிவுரை பகர்தல் முறையின் குறைபாடுகள்

i) இது காலம் அதிகம் எடுத்துக் கொள்ளும் முறையாகும்.

ii) அறிவுரை அளிப்பவர் அதிகம் செயல்பட விரும்பாத மனப்பான்மை,

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



அறிவுரை பெறுபவரிடம் எரிச்சலை உண்டாக்குகிறது. எனவே அவர் தன்னுடைய உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்த விருப்பமில்லாமலிருப்பார்.

iii) இம்முறை, தீவிர நடத்தைக் கோளாறு உள்ளவர்களுக்கும், இளஞ்சிறார்களுக்கும், நுண்ணறிவு குறைபாடு உள்ளவர்களுக்கும் ஏற்றது அல்ல.

### 20:10:3 அறிவுரை பகர்தலில் சமரச முறை (Eclectic Counselling)

**எப்.சி. தார்ன்** (F.C. Thorne) என்பவர் இம்முறையில் தேர்ச்சி பெற்று, பிரபலப்படுத்தியவர். இம்முறையில் நெறிப்படுத்தப்பட்ட முறையில் செயல்படுவதைப் போல், அறிவுரை பகர்பவர் ஆதிக்கம் செலுத்துவதில்லை. அதே சமயத்தில் நெறிசாரா முறையில் அதிகம் செயல்படாமலிருந்து, ஊக்குவித்தலை மட்டும் மேற்கொண்டிருந்த செயல்பாட்டையும் முழுமையாகப் பின்பற்றுவதில்லை. இவ்விரண்டு முறைக்கும் இடைப்பட்ட முறைதான் சமசர முறை ஆகும்.

இம்முறையில் அறிவுரை பகர்பவர், தன்னை நாடி வருபவரின் தன்மை, அவரது கோளாறின் தன்மை ஆகியவற்றிற்கேற்ப தான் செயல்பட வேண்டிய அணுகுமுறையைத் தேர்ந்தெடுக்கிறார். பொதுவாக தன்னை நாடி வருபவரின் பிரச்சனைக்கான காரணத்தை ஆராய்ந்தறியும் நிலைவரை நெறிப்படுத்தப்பட்ட அறிவுரை பகர்தல் முறையை கையாள்கிறார். பின்பு பிரச்சனைக்குரியத் தீர்வைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை, நெறிசாரா அறிவுரை பகர்தல் முறைப்படி, அறிவுரை பெறுபவரிடமே விட்டு விடுகிறார். அதாவது பிரச்சனைக்குரிய பல்வகை தீர்வுகளின் சாதக – பாதகங்களை மட்டும் தெளிவுபடுத்தி விட்டு, அறிவுரை பெறுபவரையே தனக்குகந்த தீர்வை தேர்ந்தெடுக்க விட்டு விடுகிறார். எனவே சமசர முறையில் தேவைக்குத் தகுந்தவாறு அணுகுமுறை மாற்றிக் கொள்ளப்படுவதால், ஒருவித நெகிழ்வுத் தன்மை காணப்படுகிறது, இன்றைய கல்விச் சூழலில், வழிகாட்டுபவர்களில் பெரும்பாலோர், இம்முறையையே மேற்கொள்கின்றனர்.

### 20:10:4 குழு அறிவுரை முறை (Group Counselling)

அறிவுரை பகர்தலில் தனிநபர் முறை, குழு முறை என்னும் இரு உத்திகள் உள்ளன. "பிரச்சனையைத் தாமே தீர்த்துக் கொள்ள இயலாத நிலையிலுள்ள தனிநபருக்கு, பயிற்சி பெற்ற ஒருவர் நேரடித் தொடர்பு

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



**நிலையில் ஆற்றுப்படுத்துவதோடு, பிரச்சனைக்குரிய தீர்வை அடையச் செய்ய உதவுதல்**" என்னும் 'அறிவுரை பகர்தலின்' வரையறைப்படி, தனிநபர் அறிவுரை முறை என்பதே பொருத்தமான ஒன்றாகத் தோன்றுகிறது. 'தனி நபருக்கு அறிவுரை வழங்குதல்' என்னும் உத்தியில் (Technique) மூன்று முறைகள் அதாவது (i) நேரடி அறிவுரை முறை, (ii) மறைமுக அறிவுரை முறை, (iii) அறிவுரை வழங்குதலில் சமரசப் போக்கு ஆகியவை இடம் பெறுகின்றன. ஆனால் நடைமுறையில் 'குழு அறிவுரை முறை' என்னும் இரண்டாவது உத்தியும் குறிப்பிடப்படுகிறது.

**நான்கு முதல் ஆறு பேர் வரையுள்ள சிறு குழுவினர் தங்களது பொதுப் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்து ஆற்றுப்படுத்திக் கொள்ளும் செயல் பாடுகள் "குழுவாக அறிவுரை பெறுதல்" அல்லது "குழு ஆற்றுப்படுத்துதல்" என்றறியப்படுகிறது. இக்குழுவினுள் ஒரு பயிற்சி பெற்ற வல்லுனரும் இடம் பெறுவார். இத்தகைய குழுவின் ஆற்றுப்படுத்தும் அமர்வுகள் 4 முதல் 6 வரை இருக்கும்.**

தனிநபர் அறிவுரை பகர்தலில் ஈடுபடும் சிறப்புப் பயிற்சி பெற்ற வல்லுநர் தன்னிடம் ஆலோசனை நாடி வருவோரின் பிரச்சனை களைக் கண்டறிந்தபின், ஒத்தத் தன்மையுள்ள பிரச்சனையுடையோரை ஒன்றிணைத்து சிறு குழுவாக்கி, அவர்களைத் தமக்குள் தங்களது பிரச்சனைகளையும், அவற்றிற்கான காரணங்களையும், பொருத்தமானத் தீர்வுகளாக எவை அமையக்கூடும் என்பதையும் தத்தம் அனுபவங்களின் அடிப்படையில் விவாதிக்கச் செய்யலாம். அறிவுரை பகர்பவரும் இக்குழு விவாதத்தில் பங்குபெற்று தமது பங்களிப்பை நல்கிடலாம். இவ்வாறு ஒரேவிதமான பிரச்சனையால் பாதிக்கப்பட்டோர், கருத்தளாவலில் ஈடுபடும்போது, அவர்களுக்குள் ஒருவித புரிந்துணர்வும், ஒற்றுமை யுணர்வும் ஏற்படுகின்றன. கருத்தளாவலின் காரணமாக தான் மட்டும் பாதிக்கப்படவில்லை, தன்னைப் போன்ற இன்னும் எத்தனையோ பேருக்கு இத்தகைய பிரச்சனை உள்ளது என்ற புரிந்துணர்வு ஏற்படுவதால், பிரச்சனையால் பாதிக்கப்பட்டோருக்கு மனச்சுமை குறைந்து ஒருவித நிம்மதி ஏற்படுகிறது. குழுவாகக் கூடி ஆற்றுப்படுத்திக் கொள்ளும் அமர்வுகள் (Group Counselling Sessions) மூலம், பிரச்சனையுடை யோருக்கு சக பங்கேற்பாளர்களின் கருத்துக்களையும் அவர்கள் கூறும் தீர்வுகளையும் பரிசீலிப்பதற்கு வாய்ப்புகள் கிட்டுகின்றன.

பிரச்சனையைப் பற்றிய மாற்றுப் பார்வைகளையும், (alternative view points) தீர்வுகளையும், தனிநபர் அறிவுரை பகர்தலில் அறிவுரை பகர்பவர்

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



அளிக்கிறார். ஆனால் இதே பணியை குழு அறிவுரைப் பகர்தலில் சக பங்கேற்பாளர்கள் (Fellow Participants) அளிக்கின்றனர். உளவியல் ஆய்வுகள், ஒத்தத்தன்மையுடையோரது (Peer Group) கருத்துக்கள் ஏனையோரதைவிட அதிக செல்வாக்கு பெற்றவை என்பதை நிரூபித்துள்ளன.

அறிவுரையை நாடிச் செல்வோருக்கு (Counsellees), குழுவாகக் கூடி விவாதிக்கும்போது சுயபங்கேற்றல் மூலம் பிரச்சனையையும் அதற்கான தீர்வையும் புரிந்து கொள்ளும் உணர்வு ஏற்படுகிறது. இந்தப் புரிந்துணர்வு தான் ஆற்றுப்படுத்துதலுக்கான அடிப்படை (Basis for Counselling) ஆகும். பங்கேற்போர் ஒவ்வொருவரும், பிறரது கருத்துகளையும் தீர்வுகளையும் ஏற்றுக் கொள்ள முடியாதபோதும், அவற்றைப் புரிந்து கொள்ளவும், மதிக்கவும் முயற்சி செய்கின்றனர். இம்முயற்சி அவர்களது பார்வையை / கண்ணோட்டத்தை விரிவு படுத்துவதால், ஆளுமை வளர்ச்சி மேம்பாடு அடைகிறது.

குழு ஆற்றுப்படுத்துதலில், அறிவுரை பகர்பவரின் ஆதிக்கம் ஏதுமில்லை. அவர் ஏற்கனவே ஒவ்வொரு பங்கேற்பாளரையும் நன்கு புரிந்து வைத்திருப்பதால், குழு விவாதங்களில் பங்கேற்பாளர்கள் அனைவரும் துடிப்புடன் பங்கு பெற்று கருத்தளாவிடத் தூண்டுதலாக அமைகிறார்.

## 20:10:4:01 குழு அறிவுரை முறையின் குறைபாடுகள்

என்னதான் இருந்தாலும் குழு அறிவுரை முறை தனிநபர் அறிவுரை முறைக்கு ஈடாகாது. அதற்கான காரணங்களாவன :

i) 'ஆற்றுப்படுத்துதல்' என்னும் செயல்முறையில், அறிவுரை பெறுபவர் அறிவுரை பகர்பவரை எவ்வாறு நோக்குகிறார் என்பது முக்கியமாக அமைகிறது. குழு ஆற்றுப்படுத்துதலில், தனிநபர் அறிவுரை முறையைப் போல், இந்நோக்கு குவிவடைவதில்லை.

ii) தனிநபர் ஆற்றுப்படுத்துதலில் தான், அறிவுரை நாடுவோரின் குறிப்பிட்ட சில தேவைகள் நன்கு நிறைவுபெறுகின்றன. தமது அந்தரங்கப் பிரச்சனைகளை குழுமுன் தெரிவிக்க எவருமே தயக்கம் காட்டுவர். அவற்றின் இரகசியத் தன்மை காக்கப்படும் என்ற எந்த உத்தரவாதமும் குழு அறிவுரை முறையில் இல்லை.

iii) சில அமர்வுகளில், அறிவுரை பகர்பவருடன் மனநெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட பின்னரே, பிரச்சனையின் முழுப்பரிமாணமும்

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



வெளிப்படும். இத்தகைய மனநெருக்கம் குழு அறிவுரை முறையில் கிடைப்பதில்லை.

iv) அறிவுரை பகர்பவரின் நிபுணத்துவமும், தனிக்கவனமும் குழு ஆற்றுப்படுத்துதலில் அறிவுரை நாடுபவருக்கு முழுமையாகக் கிடைப்பதில்லை.

v) குழுவில் உள்ள சக பங்கேற்பாளர்களிடம் மனநெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும், அதன் மூலம் தமது இரகசியங்கள் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கும் போதிய கால அவகாசம் கிடைப்பதில்லை.

சுருங்கக்கூறின் தீவிர பிரச்சனைகளுக்கு ஆட்பட்டு மனக்குழப்பத்தில் உள்ளோருக்கு தனிநபர் அறிவுரை பகர்தல் முறையே சாலச்சிறந்தது.

## 20:11 அறிவுரை பகர்தலுக்கும், வழிகாட்டுதலுக்கும் இடையே யான வேறுபாடுகள்

'அறிவுரை பகர்தல்' என்பதை விட 'வழி காட்டுதல்' என்பது விரிவானது; பரந்துபட்டது. **ஹோய்ட்** (Hoyt) என்பார் கருத்துப்படி, மாணாக்கர்களின் வளர்ச்சிக்குத் தேவையான பல்வகை பணிகளின் (அறிவுரை பகர்தல் உட்பட) தொகுப்பே வழிகாட்டுதல் ஆகும். கல்வியில் வழிகாட்டுதலில் அடங்குபவையாவன:

i) புதிதாக பள்ளி/கல்லூரிகளில் நுழைபவர்களுக்கு பயிற்சி அளித்தல்.

ii) மாணவர்களின் வாசிக்கும் திறனை மேம்படுத்தல்

iii) மாணவர்கள் பற்றிய தகவல் திரட்டும் பணி

iv) மாணவர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கும் பணி

v) ஆலோசனை வழங்குதல் அல்லது அறிவுரை பகர்தல்

vi) வேலையில் (தொழிலில்) அமர்த்தும் பணி

vii) பின்தொடர் செயல் பணி (Follow up service)

எனவே 'அறிவுரை பகர்தல்' என்பது வழிகாட்டுதலின் ஓர் உட்கூறே. தீவிர பிரச்சனைக்கு ஆட்பட்டவருக்கு மட்டும், சிறப்புப் பயிற்சி பெற்றவரால் நேருக்கு நேர், தனித்த சூழ்நிலையில் மேற்கொள்ளப்படும் வழிகாட்டுதலே அறிவுரை பகர்தல் எனப்படும்.

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



## 20:12 சிறந்த அறிவுரை பகர்பவராகத் திகழ தேவைப்படும் பண்புகள் (Qualities of a Good Counsellor)

ஆசிரியரே பள்ளியின் 'வழிகாட்டுதல் சேவை மையத்தில்' (School Guidance Centre) பணி புரியலாம்; அல்லது அதற்கென தொழில்முறைப் பயிற்சியும் (Professional training) சிறப்புக் கல்வித் தகுதியும் பெற்ற ஆலோசகர்கள் (Counsellors) நியமிக்கப்படலாம். இவ்வாறு தனி ஆலோசகர் நியமிக்கப்பட்டாலும், அவர் தம் பணியை சிறப்பாக செய்திட வகுப்பாசிரியர்களின் முழு ஒத்துழைப்பையும் பெறுவது மிகவும் அவசியம். திறன்மிகு அறிவு பகர்வோராக விளங்க கீழ்க்கண்ட பண்புகள் தேவைப்படுகின்றன.

i) மாணவர்களது இயல்புகளையும் தேவைகளையும் ஊடுருவி அறியும் ஆற்றல் பெற்றிருப்பதோடு, மாணவர்களோடு மனநெருக்கம் ஏற்படுத்திக் கொள்வதில் வல்லவராக இருத்தல் வேண்டும்.

ii) மாணவர்களின் பிரச்சனைகளை அறிவதில் நுண்ணுணர்வு (Sensitivity) கொண்டவராக இருத்தல் வேண்டும்

iii) தன்னை நாடி வருவோரின் பிரச்சனைகளை பரிவுடன் கேட்டறிபவராக இருத்தல் வேண்டும்

iv) அறிவுரை பகர்வதில் தொழில்முறை பயிற்சியும், உளவியல் அறிவும் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்

v) மாணவர்களைப் பற்றிய விவரங்களை சேகரிப்பதற்கான பல்வகை ஆய்வுக் கருவிகளைத் திறமையாகக் கையாளும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்; சேகரித்த விவரங்களை ஆய்வு செய்து பிரச்சனைக்கான காரணத்தையும், அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் கண்டறிவதில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.

vi) அறிவுரை பகர்பவரின் செயல்பாடுகள் அனைத்தும் புறவயத் தன்மை மிகுந்ததாக இருத்தல் வேண்டும்

vii) தன்னிடம் உதவி பெற வருவோரைப் பற்றிய முழு விவரங்களை அறிந்திருத்தலோடு, அவற்றின் இரகசியத் தன்மையை பாதுகாப்பவராகவும் இருத்தல் வேண்டும்; வழிகாட்டுதலுக்காக சேகரிக்கப்பட்ட விவரங்களை அந்நோக்கத்தைத் தவிர வேறு எவ்வகையிலும் பயன்படுத்திட எண்ணலாகாது.



G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



viii) அறிவுரை பகர்பவர் தன்னிடம் ஆலோசனை கேட்டு வருவோரிடம், சுயப் பொருத்தப்பாட்டினையும் (Self-adjustment), தானே நெறிப்படுத்திக் கொள்ளுதலையும் (Self-direction) ஏற்படுத்திட முனைய வேண்டும்.

ix) அறிவுரை பகர்பவரின் செயல்பாடுகள் அனைத்திலும் பரிவு (Sympathy), கனிவு (Kindness), மற்றும் தளரா நம்பிக்கை (Optimism) மிகுந்து காணப்பட வேண்டும்.

## 20:13 கல்வி நிலையங்களில் அறிவுரை தேவைப்படும் மாணவர்கள் (Children who need Counselling)

'வழிகாட்டுதல்' என்பது அனைவருக்குமே வளர்ச்சிப்பருவங்களில் ஏதோ ஒரு நிலையில் தேவைப்படுகிறது. நாம் அனைவருமே பிரச்சனை களை எதிர்கொள்ளும்போது, அதை நாமே தீர்த்துக் கொள்ள இயலாத நிலையில் பிறரது உதவியையும் வழிகாட்டுதலையும் நாடுகிறோம். ஆனால் தீவிர மனவெழுச்சி மற்றும் நடத்தைப் பிரச்சனை உடையோருக்கு அறிவுரை பகர்தல் மட்டுமே பயன் விளைவிக்கும். இது பயிற்சி பெற்ற ஒருவர், பிரச்சனையுடையவருடன் தனித்த நேர்முகத் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு ஆலோசனை வழங்குதலாகும்.

i) **நடத்தைப் பிரச்சனையுடையோர் :** தொடர்ந்து வகுப்புக்குச் செல்லாமை, பிற குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துதல், திருடுதல், பொய் சொல்லுதலை வழக்கமாகக் கொண்டிருத்தல், பிறர் உடைமைகளுக்கு சேதம் விளைவித்தல், எதிர்பால் இனத்தவரிடம் ஒழுக்கமின்றி நடந்துக் கொள்ளுதல் (Sexual Misbehaviour), ஆசிரியர்கள் அளித்திடும் வீட்டு வேலைகளை (Home Work) செய்யாமலிருத்தல், பள்ளிக்கு தினமும் காலம் தாழ்ந்து வருதல், எப்போதும் உடல்நலம் குன்றியவர் போல் பாவனை செய்தல் போன்ற ஒழுங்கு நடத்தைகளில் பிரச்சனை யுடையோரையும், பிற மாணவர்களுடன் கூடிப்பழகாமல் அதிகக் கூச்சமும் நாணமும் கொண்டு எப்போதும் தனித்திருத்தல், கூச்சலிட்டு அழுது ஆர்பாட்டம் செய்து கடும் சினத்தை வெளிப் படுத்துதல் போன்ற ஆளுமைசார் பிரச்சனை நடத்தையுடைய மாணவர்களையும் கண்டறிந்து பயிற்சி பெற்ற மனநல வல்லுநரின் அறிவுரை பகர்தலுக்கு உட்படுத்த வேண்டும். திறமையான வகுப்பாசிரியர் இத்தகைய மாணவர்களை **தொடர் உற்றுநோக்கல்** மூலம் இனம் காணுதல் எளிதான காரியமே ஆகும்.

ii) **கல்விப் பிரச்சனையுடையோர் :** மெதுவாகக் கற்போர் அல்லது

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



கல்வியில் மிகவும் பின்தங்கியோர் (Backward Children), திறமைக்கேற்ற சாதனை அடையாத குழந்தைகள் (Under achievers), மீத்திறன் பெற்ற குழந்தைகள் (Gifted Children), கற்றல் குறைபாடுகள் உள்ள குழந்தைகள் ஆகியோர் வெவ்வேறு விதமான கல்விப் பிரச்சனைகளைக் கொண்டிருப்பர். இத்தகைய மாணவர்களையும் கண்டறிந்து அறிவுரை பகர்தல் பெற்றிட வழிவகை செய்தல் அவசியம். இவர்களை அடையாளம் கண்டு, அறிவுரைகள் அவ்வப்போது அளித்து, பிரத்தியேகமான கல்விச் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்திடுவதைப் பற்றி இனிவரும் பத்திகளில் காண்போம்.

## 20:14 மீத்திறக் குழந்தைகள் (Gifted Children)

மூன்று முதல் 5 சதவீதக் குழந்தைகள் நுண்ணறிவு ஈவில் 130க்கும் மேற்பட்டு, அறிவுத் திறமையில் உயர்ந்து காணப்படுவர். இவர்கள் மீத்திறக் குழந்தைகள் எனப்படுவர். மீத்திறக் குழந்தைகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். இவை 1) பொது ஆற்றல் மிக்க குழந்தைகள் (Intellectually Gifted) 2) இசைக்கலை போன்ற குறிப்பிட்ட துறைகளில் மீத்திறம் பெற்ற (Specially talented) குழந்தைகள் என்பனவையாம்.

பொது ஆற்றல் மிக்க குழந்தைகளிடம் நுண்ணறிவின் பொதுக் காரணியான 'G'யின் மிகுதி, கற்றலில் அவா மிகுதி, புதுப் போக்குடைமை (Originality), விடா முயற்சி, பகுத்தறியும் திறன், முன்னேற்றத்தினை அடைய விழையும் மனப்பான்மை, நகைச்சுவை யுணர்ச்சி, தருக்க முறையில் சிந்திக்கும் சக்தி முதலியன வெகு அதிகமாகக் காணப்படும்.

குறிப்பிட்ட திறன் மிக்க குழந்தைகள் இசை, ஓவியக்கலை போன்ற குறிப்பிட்ட துறைகளில் பற்று மிகுதியும், ஆற்றல் அதிகமும் கொண்டு இருப்பர். இவ்வகையான குழந்தைகளின் நு.ஈ. பொது ஆற்றல் மிக்க குழந்தைகளின் நு.ஈ.வைப் போன்று அவ்வளவு அதிகமாக இல்லாதிருக்கலாம்.

### 20:14:1 மீத்திற குழந்தைகளை அடையாளம் காணுதல்

1. தனியாள் நுண்ணறிவுச் சோதனைகள் நடத்தி நு.ஈ. 130க்கும் மேற்பட்டு பெறுபவர்களை மீத்திறமுள்ளவர்களாகக் கொள்ளலாம்.
2. மீத்திற மாணவர்களின் கவர்ச்சிகள் பிற சம வயது மாணவர் களைக் காட்டிலும் மேம்பட்டவையாயிருக்கும். எனவே கவர்ச்சி வினாவரிசைகளைப் பயன்படுத்தி இதைக் கண்டறியலாம்.
3. உடல் வளர்ச்சி, சமூக முதிர்ச்சி பற்றிய விவரங்களும் இத்தகைய

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



மாணவர்களைக் கண்டுபிடிக்கப் பயன்படும்.

4. பள்ளித் தேர்வுகளிலும், கல்வி அடைவுச் சோதனைகளிலும் இத்தகைய மாணவர் முன்னணியில் நிற்பர்.

5. வகுப்பிற்குள்ளும், வெளியேயும் மாணவர் நடத்தையை உற்று நோக்கும் ஆசிரியருக்கு திறமை மிக்கவர்களை கண்டுபிடிக்கும் பல வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

## 20:14:2 மீத்திற குழந்தைகளின் பிரச்சனைகள்

மீத்திறன் மிக்கக் குழந்தைகளை சரியாகக் கையாளாவிடில் அவர்கள் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பெருத்த தலைவலியாக மாறிவிடுவர். அத்தகைய குழந்தைகளின் பிரச்சனைகளாவன :

i) மீத்திறன்மிக்கக் குழந்தைகளுக்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் உரிய பாராட்டுதலை தெரிவிக்கத் தவறும்போது, அவர்களது கவனத்தைத் தம்பால் ஈர்க்க இத்தகைய குழந்தைகள் குறும்புத் தனங்களில் (mischief) ஈடுபடக்கூடும்.

ii) தாம் விரும்பிப் பயிலும் பாடங்களில் தம் திறமைக்கேற்ப முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்புகள் கிடைக்காதபோது, கற்பதில் ஆர்வம் இழப்பர்.

iii) தகுந்த வாய்ப்புகளும், பாராட்டுதல்களும் கிடைக்காதபோது பெருத்த ஏமாற்றத்திற்கு உள்ளாகி தாழ்வு மனப்பான்மை கொள்ளத் தொடங்குவர்.

iv) அளவுக்கதிகமாக பெற்றோரிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் பாராட்டுதல்களைப் பெறும் மீத்திறக் குழந்தைகள் தற்பெருமை-யடித்துக் கொள்ளக்கூடும்.

v) சரியான வழிகாட்டுதல்களைப் பெறாத மீத்திறன் குழந்தைகள், தமது அறிவாண்மையை ஒழுங்கின்மையை வெளிப்படுத்தும் செயல்களிலும் சில சமயம் நாச வேலைகளிலும் கூட பயன்படுத்திடும் அபாயம் உண்டு.

## 20:14:3 மீத்திற குழந்தைகளுக்குரிய கல்வி முறைகள்

i) ஆற்றல் வழி வகைப்படுத்துதல் முறைப்படி, மீத்திறக் குழந்தை களுக்கென்றே பள்ளியில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தி கல்வி போதித்தல் நலம். மீத்திறக் குழந்தைகளைத் தனிமைப்படுத்தும் போது கல்வியொழிந்த மற்ற பள்ளி நடவடிக்கைகளில் பிற மாணவர்களுடன்,

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



தாராளமாக அவர்கள் பழக வாய்ப்பளித்தல் அவசியம். இல்லையேல், அவர்கள் கர்வம் மிகுந்து, சமூகத்துடன் பொருந்தும் தன்மை கெட்டு தனியாள்களாக வளர்வர்.

ii) மீத்திற குழந்தைகளை ஆண்டு இறுதியில் அடுத்த வகுப்புக்கு மாற்றாமல் அதற்கு அடுத்த உயர்வகுப்புகளுக்கு மாற்றும் '**துரிதப் பிரிவு மாற்றல் முறை**' (Grade Accelaration Method)யை மேற்கொள்ளலாம். இப்படி மேல் வகுப்புக்கு மாற்றுவது, பொது மைய வட்டமுறை (Concentric Method of Arrangement)யில் பாடத்திட்டம் அமைக்கப்பட்டிருந்தாலே பயனளிக்கும். ஒவ்வோர் ஆண்டும் இப்படி வகுப்பு மாற்றம் அளித்தால் மீத்திறமாணவர்கள் சிறுவயதிலேயே பள்ளியை விட்டு, பரந்த உலகில் அடி எடுத்த வைக்க நேரிடும். இதனால், சமூக முதிர்ச்சி பெறாமலேயே போகக் கூடிய அபாயம் உள்ளது.

iii) '**பாடதிட்டத்தை அதிகரிக்கும் முறை**' (Enrichment Method) சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதில் ஒரு வகுப்பில் படிக்கும் மீத்திற குழந்தைகளுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் அவர்களது ஆற்றலுக்குகந்த அதிகப்படியான வேலை கொடுக்கப் படுகிறது. அவ்வேலையை முடிக்கக் கொடுக்கப்படும் கால அளவும் குறைக்கப் படுகிறது.

vi) குறிப்பிட்ட சிறப்பு ஆற்றலில் மீத்திறம் பெற்ற மாணவர்களுக்கு அவ்வாற்றலைப் பொறுத்தவரை மேல்வகுப்பு மாணவர்களுடன் சேர்த்துக் கற்பிப்பது சிறந்த முறையாகும். இன்று நம் நாட்டில் பயன்படுத்தப்படும் "ஆற்றல் மிக்க மாணவர்களை கண்டறியும் தேர்வுகள்" (Talent Search Examinations) மீத்திறம் பெற்றோரைக் கண்டறியவும் இவர்களுக்கான சிறந்த வாய்ப்புகளை அளிக்கவும் உதவுகின்றன. 'நவோதயாப் பள்ளிகள்' வசதி குறைந்த ஆனால் திறன் மிகுந்த குழந்தைகளது தரமான கல்விக்கு வழி செய்வதாக உள்ளது.

## 20:15 கல்வியில் பின்தங்கியோர்

முன்பு கல்வியில் பின்தங்கியோர் (Educationally Backward) என்று அழைக்கப்பட்டோர் தற்போது 'மெதுவாக கற்போர்' (Slow Learners) என்று பெயரிடப்பட்டுள்ளனர். இத்தகையோர் தொடர்ந்து பள்ளித் தேர்வுகளில் குறைந்த மதிப்பெண்களையேப் பெறுவர். இக்குறைந்த கல்வித் தேர்ச்சி, அனைத்துப் பள்ளிப் பாடங்களிலுமோ அல்லது ஒன்றிரண்டு பாடங்களிலோ இருக்கக்கூடும். இவர்களது நுண்ணறிவுக் கெழு பொதுவாக 70 முதல் 80 வரை இருக்கும்.

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



பள்ளிப் பாடங்களில் சாதாரண நிலையினின்றும் இரண்டு ஆண்டுகள் தாமதித்த (Retarded) நிலையிலிருக்கும் மாணவர்களை கல்வியில் பிற்பட்டவர்கள் எனலாம் என்று ஸிரில் பர்ட் என்ற உளவியல் அறிஞர் கூறுகிறார். இவர்களது கல்வி ஈவு (Educational Quotient) 85க்கும் குறைவாக இருக்கும்.

கல்வி ஈவு என்பது மாணவனது அடைவு வயதுக்கும் (Attainment Age) கால வயதுக்கும் உள்ள விகிதமாகும்.

$$\text{கல்வி ஈவு} = \frac{\text{அடைவு வயது}}{\text{கால வயது}} \times 100$$

## 20:15:1 கல்வியில் பின்தங்குவதற்கான காரணங்கள்

கல்வியில் மாணவர்கள் பின்தங்குவதற்கான காரணங்கள் மரபு நிலையைச் சார்ந்தவையாகவோ, சூழ்நிலைத் தாக்கங்களின் விளைவாக ஏற்பட்டவையாகவோ இருக்கலாம். மரபுநிலைக் காரணிகளால் ஏற்படும் தாக்கம் தீவிரமானதாகவும், முழுமையாக சீரமைக்க முடியாததாகவும் அமையும். ஆனால் சூழ்நிலைக் காரணிகளால் ஏற்படும் தாக்கங்கள், அளவிலும் சீர் பெறக்கூடிய தன்மையிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றன.

நலிவடைந்த குடும்பங்களிலிருந்து வரும் திறன் படைத்த மாணவர் கள் தம் குழந்தைப் பருவத்தில் திறன் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் கிடைக்காத காரணத்தால் திறமைக்கேற்ற சாதனை புரியாமலும், சில சமயம் கல்வியில் வெகுவாக பின்தங்கியும் காணப்படுவர். பொருளாதார நிலையில் நலிவடைந்து காணப்படும் குடும்பங்கள், சமூக மற்றும் கலாச்சார ரீதியாக ஒடுக்கப்பட்டோரது குடும்பங்கள் (Socially and Culturally deprived families), சிறுபான்மையினத்தைச் சேர்ந்த குடும்பங்கள் ஆகியவற்றிலிருந்து வரும் மாணவர்கள், மாறுபட்ட பண்பாட்டுச் சூழலில் வளரும் குழந்தைகள் (அமெரிக்கா, பிரிட்டன், நார்வே, ஸ்வீடன், ஜெர்மனி, பிரான்சு போன்ற மேலைநாடுகளில் வளரும் இந்தியக் குழந்தைகள்) போன்றோரிடம் இயற்கையாக புதைந்திருக்கும் ஆற்றல்களும் திறன்களும் போற்றி செழிப்புறச் செய்யும் சூழ்நிலைகள் கிடைக்காத நிலையில் மலர்வதில்லை. குறிப்பாக இளம்பிராயத்தில் ஒடுக்கப்பட்ட பண்பாட்டு சமூகக் கலாச்சார சூழல்கள், அறிதிறன் வளர்ச்சிக்கு உதவாத சூழல்கள் ஆகியவற்றின் கோரப்பிடியில் சிக்குவோர், கல்வித் தேர்ச்சியில் தீவிரமாகப் பின்தங்குவதோடு அவற்றின் தொடர் விளைவுகளுக்கும் ஆளாகின்றனர்.

## 20:15:2 கல்வியில் பின்தங்கியோரை அடையாளம் காணுதல்

i) தனியாள் நுண்ணறிவு சோதனைகள் மூலம் நு.ஈ. கண்டறிந்து, 70 முதல் 80 வரை உள்ள மெதுவாகக் கற்போரை அடையாளம் காணலாம்.

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



ii) இவர்களைப் பற்றிய மருத்துவ பரிசோதனை அறிக்கைகள், ஒழுங்கு நடத்தை பற்றிய அறிக்கைகள் (conduct reports), இவர்களது குடும்பம், சுற்றுப்புறம் ஆகியவை பற்றிய விவரங்கள் போன்ற எல்லாவற்றையும் சேர்த்து ஒவ்வொரு பிற்பட்ட மாணவனின் இயல்பைப் பற்றியும் அவன் வளரும் சூழ்நிலையைப் பற்றியும் விவரமான ஓர் அறிக்கை (case history) தயாரித்து அதை நன்கு ஆராய்ந்த பின்னரே, அம்மாணவன் உண்மையாகவே பிற்பட்டவனா என்றும், எவ்வகை பிற்பட்டவனென்றும் ஒரு முடிவுக்கு வர வேண்டும். பிற்பட்ட குழந்தைகளின் நிலைக்குக் காரணங்களைக் கண்டுபிடித்து உதவ பள்ளிகளில் **"வழிகாட்டும் விடுதிகள்"** (Child Guidance Clinics) நிறுவப்பட வேண்டும்.

### 20:15:3 பள்ளிகளில் கல்வியில் பின்தங்கியோருக்கு உதவுதல்

i) மெதுவாகக் கற்போருக்கான தனிப்பட்ட வகுப்புகள் நடத்துவது தான் சிறந்த முறையாகும்.

ii) இம்மாணவர்களுக்கு கற்பிப்பதில் தனிக்கவனம் (Individual Attention) செலுத்த வேண்டும்.

iii) ஒவ்வொரு கருத்தை போதித்த பின்பும் அதை நிலைநிறுத்த அதிக அளவு பயிற்சி (Drill) கொடுக்கப்பட வேண்டும்.

iv) வகுப்பறை கற்பித்தலில் பருப்பொருள் நிலைக் கற்பித்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விளக்கப்படங்கள், மாதிரிகள் செய்து காட்டல், காட்சி கேள்வி சாதனங்களை பயன்படுத்துதல் போன்றவற்றை அதிக அளவில் ஈடுபடுத்த வேண்டும்.

v) ஒரு குழந்தை எவ்வளவு பிற்பட்ட நிலையில் காணப்படினும், அதனை ஆசிரியர் பரிவுடன் ஏற்று, பிற மாணவர்களிடம் நடந்து கொள்வது போன்றே அதனிடமும் இயற்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

vi) புதிய கற்றல் அனுபவங்களை அவர்களது பழைய கற்றல் அனுபவங்களின் அடிப்படையில் அவற்றுடன் தொடர்பு படுத்தி ஆசிரியர் கற்பிக்க வேண்டும்.

vii) குழந்தைகளது தன்னம்பிக்கை வளர உற்சாமூட்டும் வகையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

viii) உடற்குறைபாடுகள் சில குழந்தைகளிடம் காணப்பட்டால் இவற்றைத் தீர்க்க ஆசிரியர் உதவுவதுடன், இக்குறைபாடுகள்

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



அக்குழந்தைகளது கல்வி வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றியும் உணர முற்பட வேண்டும்.

ix) குழந்தைகளது சமூகப் பின்னணி பற்றிய விவரங்களை ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும். இப்பின்னணியின் அடிப்படையில் தான் இக்குழந்தைகளது அனுபவங்கள் அமைந்திருக்கும். இவ்வனுபவங்களே அவர்களது திறன்கள், மனப்பான்மைகள், கவர்ச்சிகள், பழக்கங்கள், குறிக்கோள்கள், போன்றவற்றை நிர்ணயிப்பனவாம். இப்பின்னணி பற்றிய அறிவு, குழந்தைகளது இன்றைய கல்விப் பிரச்சனைகளை உணர்வதற்கும், புதிய பிரச்சினைகளும், சிக்கல்களும் எதிர்காலத்தில் எழாமல் தடுப்பதற்கும் ஆசிரியருக்கு உதவும்.

## 20:16 திறமைக்கேற்ற சாதனை அடைவு இல்லாத குழந்தைகள்

ஒவ்வொரு மாணவரும் தத்தம் திறமையை முழுமையாகப் பயன் படுத்தி கல்வியில் தேர்ச்சியடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுவதால், அதற்குத் தேவையான வாய்ப்புகளை ஏற்படுத்திடுவதாக கல்வி நிலையங்கள் செயல்பட வேண்டும். ஆனால் பள்ளிகளில் சில மாணவர் களது கல்வித் தேர்ச்சி, அவர்களது அறிதிறன் நிலைக்கு ஏற்றவாறு இல்லாமல் மிகவும் குறைந்து காணப்படும். இக்குறைந்த கல்வித்தேர்ச்சி அனைத்துப் பள்ளிப் பாடங்களிலுமோ அல்லது ஒரிரு பாடங்களிலுமோ இருக்கக்கூடும். இவர்களது நுண்ணறிவுக் கெழு 100 மற்றும் அதற்கு மேம்பட்டே காணப்படும். இவர்களில் சிலர் மீத்திறன் மிக்கவராகவும் இருக்கக் கூடும். இத்தகையோர் **உயர் அறிதிறனை பெற்றிருந்தும் குறைந்த கல்வித் தேர்ச்சிப் பெற்றுத் திகழ்தலை "திறமைக்கேற்ற சாதனை அடைவு இல்லாதிருத்தல்"** (Under Achievement) **என்றழைக்கிறோம்.**

நுண்ணறிவுக் கெழு 130க்கு மேல் பெற்றுள்ள மீத்திறன் மிக்கோர் கல்வி அடைவுத் தேர்வுகளில் (Scholastic Achievement Tests) 40–45 விழுக்காடு மதிப்பெண்களேப் பெறுவதும், 90 முதல் 110 வரை நுண்ணறிவு ஈவு உடையோர் பள்ளித் தேர்வுகளில் தோல்வியுறுவதும், "திறமைக்கேற்ற சாதனை அடைவைப் பெறாமையே" ஆகும்.

அறிவுக்கேற்ற சாதனையின்மைக்கு மரபுநிலையோ, அதனின்றும் எழும் நுண்ணறிவுக் குறைவோ காரணமன்று. இத்தகையோரது குறைந்த சாதனைக்கு சூழ்நிலைக் காரணிகளும், ஊக்கக் குறைவும் தான் அடிப்படையாக அமைகின்றன.

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



## 20:16:1 திறமையிருந்தும் குறைசாதனையுடையோராகத் திகழ்வதற்கான காரணங்கள்

குறைசாதனையுடையோரைத் தோற்றுவிப்பதற்கான காரணிகளை குடும்பச்சூழ்நிலை, சுற்றுப்புறச் சமுதாயச் சூழ்நிலை, பள்ளிச்சூழ்நிலை மற்றும் மாணவரது தனிப்பண்புகள் என்னும் 4 பெரும் பிரிவுகளில் உள்ளடக்கலாம்.

**(i) குடும்பச் சூழ்நிலை சார்ந்த காரணிகள்**

1. குடும்பச் சூழ்நிலையில் எழும் சிக்கல்களும் சீர்கேடுகளும் (பெற்றோரை இழத்தல், பெற்றோர் பிரிந்து வாழத்தலைப்படல், பெற்றோர்கள் குழந்தைகளின் முன்னிலையில் சண்டையில் ஈடுபடுதல், திடீர் பொருளாதார சீர்குலைவு போன்றவை) திறமை மிகுந்த மாணவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி அவர்களது சாதனையை வெகுவாக பாதித்திடலாம்.
2. மிதமிஞ்சிய வறுமைநிலை, திறமையுள்ளோரது திறன் வளர்ச்சிக் கான வாய்ப்புகளைக் குறைத்து சாதனைகளை குறைத்திடக்கூடும்.
3. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட நிலையிலுள்ள குடும்பங்கள், சிறு பான்மை சமூகத்தைச் சார்ந்த குடும்பங்கள், குழந்தைகள் எண்ணிக்கை அதிகமுள்ள பெரும் குடும்பங்கள் போன்றவற்றி லிருந்து பள்ளிக்கு வரும் குழந்தைகளின் சாதனை அடைவும், அவர்களது திறமைக்கேற்றவாறு இல்லாமல் குறைந்து காணப்படக் கூடும்.

**(ii) சமுதாயச் சூழ்நிலை சார்ந்த காரணிகள்**

அன்பு, பரிவு, பாராட்டு, சமூக ஏற்பு, காப்புணர்ச்சி போன்ற மனம் சார்ந்த சமூகத் தேவைகளை குழந்தைகளது குடும்பமோ, பள்ளியோ, சுற்றுப்புறச் சமுதாயமோ நிறைவு செய்யாத நிலையில் திறமை மிகுந்த மாணவர்களின் கல்விச் சாதனை குறையக்கூடும். இத்தகைய சுற்றுப்புற சமுதாயச் சூழ்நிலைகள் மாணவர்களிடம் மனமுறிவினையும், மனப் போராட்டங்களையும் தோற்றுவிக்க வல்லவை.

**(iii) பள்ளிச் சூழ்நிலை சார்ந்த காரணிகள்**

1. பொதுவாக பள்ளிப்பாடத்திட்டம் சாதாரண நடுநிலை திறமையுடை யோரை மையமாக வைத்து அமைக்கப்படுவதால், அது மீத்திற மாணவர்களின் ஆற்றல்கள் தேவைகள் போன்றவற்றுடன் தொடர் பற்று காணப்படுகிறது. இதனால் திறன்மிகு மாணவர்கள் உற்சாகம்

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



குன்றி மனச்சலிப்படைகின்றனர். எனவே கற்றலில் அவர்களது ஊக்கம் குறைகிறது. சிலபோது நெறிபிறழ் நடத்தைகளிலும் ஈடுபடக்கூடும்.

2. வகுப்பில் ஆசிரியர்களும் திறன்மிகு மாணவர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கற்பித்தலை அமைத்திடாதபோது, அவர்கள் கற்றலில் ஆர்வம் குறைந்து காணப்படுவர்.

**(iv) மாணவர் தனிப்பண்புகளுடன் தொடர்புடைய காரணிகள்**

தாம் சிறப்பாகச் செயற்படுவது வகுப்பின் பிற மாணவர்களது பொறாமை உணர்வினைத் தூண்டி, சமூக செயல்களிலும் விளையாட்டு களிலும் புறக்கணிக்கப்படும் நிலை தோன்றிடின், அதிலிருந்து விடுபட இவர்கள் தமது திறன்களை முழு அளவில் பயன்படுத்தாமலும், ஒதுங்கி வாழத் தலைப்பட்டும் பொருத்தப்பாடின்மையை வெளிப்படுத்திடக் கூடும். சிலர் தீவிர மனக்கிளர்ச்சி / பதற்றத்துடன் இருப்பர்.

## 20:16:2 திறமைக்கேற்ற சாதனை அடைவைப் பெறாத மாணவர்களைக் கண்டறிதல் (Identification of Under-achievers)

முதல்படியாக நுண்ணறிவுச் சோதனையை நடத்தி மாணவர்களின் நுண்ணறிவு ஈவினை அளவிடல் வேண்டும். இதனை அவர்களின் கல்வித் தேர்ச்சியுடன் (பள்ளித்தேர்வில் பெற்ற மதிப்பெண்களுடன்) ஒப்பிட்டு, தேர்ச்சி அறிவுத்திறனைவிட மிகவும் குறைவாக உள்ளதா என்பதை சோதிக்க வேண்டும். இதற்கு கீழ்க்கண்ட அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

நுண்ணறிவுக் கெழு

தேர்வு மதிப்பெண்

| தேர்வு மதிப்பெண் \ நு.ஈவு | 71-90 | 91-110 | 111-130 | 131 மற்றும் அதற்கு மேலும் |
|---|---|---|---|---|
| 75ம் அதற்கு மேலும் | | | | |
| 51-74 | | | ........ | ........ |
| 35-50 | | xxxxxxxx | ........ | ........ |
| 35க்கு கீழ் | | xxxxxxxx | | |

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



மேற்கண்ட அட்டவணையில்  என்னும் குறியீடு மீத்திறன் மிக்க குறைசாதனையுடையோரையும்,  என்னும் குறியீடு சாதாரண நுண்ணறிவு பெற்ற குறைசாதனையுடையோரையும் குறிப்பிடுகின்றன. இவ்விருவகையினரும் "குறைசாதனையுடையோர்" என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றனர்.

பள்ளிகளில் நிர்வகிக்கப்படும் மாணவர் திரள் பதிவேடுகளை (Cumulative Records) ஆராயும்போது, சென்ற ஆண்டு வரை பள்ளித் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற்று வந்துள்ள மாணவர்களில் சிலர் இவ்வாண்டு தொடர்ந்து மிகக்குறைவான மதிப்பெண்களைப் பெறுவது தெரிய வந்தால், அத்தகையோருக்கு (இவர்கள் குறைசாதனை யுடையோர்) ஆசிரியர் தனிக்கவனம் செலுத்துவதோடு அறிவுரை பெறுதலுக்கும் பரிந்துரைக்க வேண்டும்.

## 20:16:3 திறமைக்கேற்ற சாதனை அடைவு இல்லாதோருக்கு உதவுதல்

1. இத்தகைய மாணவர்களைக் கண்டறிந்து, பள்ளி வழிகாட்டுதல் மையம் மூலம் அவர்களுக்கு அவ்வப்போது தகுந்த அறிவுரைகள் வழங்கிடல் வேண்டும்.
2. வகுப்பாசிரியர் இத்தகைய மாணவர்களிடம் தனிக்கவனம் செலுத்தி, அவர்களுக்கு தனிப்பட்ட பிரச்சனைகள் ஏதுமிருப்பின் அவற்றைக் களைய உதவ வேண்டும்.
3. அவ்வப்போது பெற்றோர் – ஆசிரியர் கூட்டங்கள் நடத்தி, இத்தகைய மாணவர்களது பெற்றோரிடம் கலந்துரையாடி அவர்களது ஒத்துழைப்போடு பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.
4. வறுமை நிலையில் உள்ள திறமையான மாணவர்களுக்கு படிப்பு உதவிக்கான சலுகைகளும், நிதியுதவியும் கிடைத்திட ஆசிரியர் தன்னாலியன்றதைச் செய்திடல் வேண்டும்.
5. இத்தகைய மாணவர்களை உடனுக்குடன் பாராட்டிப் பரிசளித்து ஊக்குவிப்பதன் மூலம் அவர்களது சாதனையை அதிகரிக்க முடியும்.
6. இத்தகைய மாணவர்களுக்கு விடுமுறைக்கால சிறப்பு முகாம்கள் நடத்தி கல்வித்துணைச் செயல்களிலும், பல்வேறு போட்டிகளிலும் பங்கு பெற வாய்ப்பளிக்கலாம்.

G-Fort Academy www.gfort.in

G-Fort Academy www.gfort.in



7. வகுப்பில் குழுமுறையில் ஒப்படைப்புகளை நிறைவேற்றிட வழிவகை செய்து, குழுத்தலைவர்களாக இத்தகைய திறமைமிகு மாணவர்களை நியமித்திடலாம்.

8. ஆசிரியரின் தனிக்கவனமும் அரவணைப்பும் இத்தகைய "திறமை யிருந்தும் குறைசாதனையுடைய" குழந்தைகளை வீறுகொண்டு எழுச்சியுறச் செய்யும் அருமருந்தாக அமைந்திடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## 20:17 கற்கும் திறமை குறைவான குழந்தைகள் (Children with Learning Disabilities)

இக்குழந்தைகள் பொதுவாக சாதாரணமான குழந்தைகளைப் போலவே தோற்றமளிப்பர். ஆனால் அவர்கள் வாசித்தல், எழுதுதல், கணக்குப் போடுதல் போன்ற கற்றல் திறன்களில் குறைபாடு கொண்டு காணப்படுவர். வழக்கமான வகுப்பறைக் கற்பித்தலால் இக்குழந்தை களிடம் கல்வி வளர்ச்சி ஏற்படாது. இவர்களின் எண்ணிக்கையானது, பள்ளி செல்லும் குழந்தைகளில் ஏறத்தாழ 15% இருக்கலாம் என கணக்கிடப்பட்டுள்ளது.

கற்கும் திறமைக் குறைவான குழந்தைகள் உடல் ஊனம் அடைந்தவர்கள் அல்ல; மனவளர்ச்சிக் குன்றியோரும் அல்ல. ஆனால் இவர்களிடம் உடலியக்கக் குறைபாடு காணப்படும். கை–கால்கள் உதறிக் கொண்டே இருக்கும். அவர்களால் வகுப்பறையில் அமைதியாக உட்கார்ந்திருக்க முடியாது. சில குழந்தைகள் உட்கார்ந்தால் அசையாமல் மணிக்கணக்கில் கூட உட்கார்ந்து விடுவர். இவர்களால் ஆசிரியர் கற்பிப்பதில் கவனம் செலுத்தவும் முடியாது. இவர்கள் பொதுவாக மருத்துவ முறைகளாலும், நடத்தைத் திருத்தல் முறைகளாலும், சிறப்புப் பயிற்சிகளாலும் குணப்படுத்தி சீர்படுத்தப் படுகின்றனர்.

## பயிற்சி வினாக்கள்

1. 'வழிகாட்டல் என்றால் என்ன? வழிகாட்டலின் முக்கிய வகைபாடுகளைக் குறிப்பிடு. (B)
[விடை : 20:02 + 20:05]

2. 'வழிகாட்டுதல்' என்பதன் முக்கியத்துவம் யாது? (C)
[விடை : 20:03]

G-Fort Academy www.gfort.in